**தமிழ்நாடு அரசு**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய அரசியலமைப்பு**

**பகுதி : தேர்தல்கள்**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

## PART - XV - தேர்தல்கள் (ELECTIONS)

### (Art 324 - 329 A)

- ❖ மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் (Representation of Peoples Act) - 1951ன்படி நிர்வாக இயந்திரத்தை இயக்க தேர்தல் நடத்தப்படுகிறது.
- ❖ மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் - 1950 வாக்காளர் பட்டியலை தயாரிப்பதற்கான நடைமுறைகள், பெயர் - சேர்த்தல், நீக்குதல், திருத்தம் செய்தல் மற்றும் தொகுதிகளை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றிற்கு விளக்கம் அளிக்கிறது.
- ❖ மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் - 1951 வாக்குப்பதிவு, தேர்தல் பிரச்சனைகள் , தேர்தல் நடத்துதல், இடைத்தேர்தல்கள், அரசியல் கட்சிகளை பதிவு செய்தல் ஆகியவை பற்றி விளக்குகிறது.
- ❖ மக்களாட்சியின் தூணாக கருதப்படுவது தேர்தல்.
- ❖ தேர்தல் மூலம் ஆளும்கட்சியின் செயல்பாட்டை மதிப்பிடலாம்.
- ❖ தேர்தல் 2 வகைப்படும். 1) நேரடி தேர்தல் (Direct Election).
  2) மறைமுக தேர்தல் (Indirect Election),

### 1.நேரடித் தேர்தல் :

- ♦ மக்கள் நேரடியாக வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளை தேர்வு செய்யும் முறையாகும். (eg) மக்களவை (லோக்சபா) தேர்தல், சட்டப்பேரவை தேர்தல்,

### 2.மறைமுகத் தேர்தல் :

- ♦ மக்கள் நேரடியாக வாக்களிக்காமல் தங்கள் பிரதிநிதிகள் மூலம் தலைவர்கள் (அ) ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கும் முறையாகும்.

(eg) குடியரசு தலைவர் தேர்தல், துணை குடியரசு தலைவர் தேர்தல், ராஜ்யசபா (மாநிலங்களவை) தேர்தல், சட்டமேலவை தேர்தல்.

**பஞ்சாயத்துராஜ் அமைப்புகளில் நேரடித் தேர்தல் :**

- (eg) கிராம பஞ்சாயத்து தலைவர் , கிராம பஞ்சாயத்து . உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்.

**பஞ்சாயத்துராஜ் அமைப்புகளில் மறைமுகத் தேர்தல் :**

→ (eg) கிராம பஞ்சாயத்து துணைத்தலைவர், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் , ஊராட்சி ஒன்றிய குழு துணைத் தலைவர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர், மாவட்ட ஊராட்சி குழு. துணைத்தலைவர்.

**நகராட்சி அமைப்புகளில் நேரடித் தேர்தல் :**

→ (eg) நகராட்சி மேயர் , நகராட்சி தலைவர் , பேரூராட்சி தலைவ ர், உறுப்பினர்கள் (கவுன்சிலர்),உறுப்பினர்கள் (கவுன்சிலர்), , மாநகராட்சி உறுப்பினர்கள்.

**நகராட்சி அமைப்புகளில் மறைமுகத் தேர்தல் :**

- (eg) பேரூராட்சி துணைத்தலைவர் , நகராட்சி துணைத்தலைவர் , மாநகராட்சி துணை மேயர்.
- காலத்தின் அடிப்படையில் தேர்தல் 3 வகைப்படும்.

1) இடைத்தேர்தல் (By Election)
2) இடைப்பருவ தேர்தல் (Mid term Election)
3) பொதுத்தேர்தல் (General Election)

**1. இடைத்தேர்தல் :**

- ஒரு தொகுதியில் உறுப்பினர் இறப்பு (அ) பதவி நீக்கம் (அ) பதவி விலகல் காரணமாக காலி பணியிடம் ஏற்பட்டால் அக்குறிப்பிட்ட தொகுதிக்கு மட்டும் நடத்தப்படும் தேர்தல்.

**2. இடைப்பருவ தேர்தல் :**

- சட்டமன்றம் (அ) நாடாளுமன்றம் (மக்களவை (அ) சட்டப்பேரவை) தனது முழு பதவிகாலமான 5 ஆண்டுகளை நிறைவு செய்யும் முன்னரே கலைத்து நடத்தப்படும் தேர்தல் இடைப்பருவ தேர்தல்.

**3. பொதுத்தேர்தல் :**

- மக்களவை (அ) சட்டப்பேரவை தனது முழு பதவிக்காலமான 5 ஆண்டுகளை நிறைவு செய்தபின் நடத்தப்படும் தேர்தல் பொதுத் தேர்தல்.

## இந்திய தேர்தல் ஆணையம் (Election Commission of India):

Art-324

- இந்திய தேர்தல் ஆணையம் இருக்க வேண்டுமென குறிப்பிடுகிறது . மேலும் தலைமை தேர்தல் ஆணையர் & தேர்தல் ஆணையர்களின் நியமனம் , பதவிகாலம், பதவி நீக்கம் ஆகியவை பற்றி குறிப்பிடுகிறது. (Superintendence, direction and control of elections to be vested in an Election Commission)
- தலைமை தேர்தல் ஆணையர் & தேர்தல் ஆணையர்களின் தகுதிகள் பற்றி மட்டும் அரசியலமைப்பில் குறிப்பிடவில்லை .
- இந்தியல் தேர்தல் ஆணையம் "நிர்வாசன் சதன்" எனப்படுகிறது.
- இந்திய தேர்தல் ஆணையம் ஒரு சுதந்திரமான & தன்னிச்சையான அமைப்பாகும்.
- 25.01.1950-ல் இந்திய தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
- தேசிய வாக்காளர் தினம் - ஜனவரி-25
- தேர்தல் ஆணையம் ஒரு தலைமை தேர்தல் ஆணையர் (Chief Election Commissioner ), 2 தேர்தல் ஆணையர்களையும் (Election Commissioners ) கொண்டது. - மொத்தம் 3 தேர்தல் ஆணையர்கள்.
- 25.01.1950 முதல் 15.10.1989 வரை ஒரு தலைமை தேர்தல் ஆணையர் மட்டுமே இருந்தார்.
- 16.10.1989 -ல் தலைமை தேர்தல் ஆணை யர்க்கு உறுதுணையாக இரண்டு தேர்தல் ஆணையர்களை

  குடியரசு தலைவர் நியமித்தார். இவர்கள் ஜனவரி 1990 வரை பதவியில் இருந்தனர்.
- ஜனவரி 1990 முதல் மீண்டும் தேர்தல் ஆணையம் 1 நபர் அமைப்பாக (தலைமை தேர்தல் ஆணையர் மட்டும்)மாறியது.
- 01.10.1993 ல் தலைமை தேர்தல் ஆணையர்க்கு உதவ 2 தேர்தல் ஆணையர்களை குடியரசுத் தலைவர் நியமித்தார். (இம்முறை தற்போதுவரை நடைமுறையில் உள்ளது)
- தேர்தல் ஆணையர்களின் எண்ணிக்கையை தீர்மானிப்பவர் - குடியரசு தலைவர்.
- தேர்தல் ஆணையர்கள் உச்சநீதிமன்ற நீதிபதிக்கு இணையான தகுதி , அதிகாரம் பெற்றவர்கள்.
- தலைமை தேர்தல் ஆணை யர் & தேர்தல் ஆணையர்களை நியமிப்பவர் - குடியரசு தலைவர்.
- இவர்களின் பதவிக்காலம் - 6 ஆண்டுகள் (அ) 65 வயது வரை.
- தலைமை தேர்தல் ஆணையர் & தேர்தல் ஆணையர்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கும் முறையில் குடியரசு தலைவர் பதவி நீக்கம் செய்வார்.
- தேர்தல் ஆணையர்களை த லைமை தேர்தல் ஆணையரின் பரிந்துரையின்றி பதவி நீக்கம் செய்ய இயலாது.
- ஒவ்வொரு மாநிலத்திற்கும் , யூனியன் பிரதேசத்திற்கும் தேர்தல் ஆணையம் சார்பில் அம்மாநிலம், யூனியன் பிரதேசத்தில் நடைபெறும் . சட்டமன்ற, நாடாளுமன்ற

தேர்தல்களை கண்காணிக்க அம்மாநில (அ) யூனியன் பிரதேசத் தில் அலுவலர் . ஒருவரை தலைமை தேர்தல் அதிகாரியாக (Chief Electroral Officer - CEO) நியமிக்கப்படுவார்.

- ♦ தேர்தல் ஆணையம் சட்டமன்ற , நாடாளுமன்ற தேர்தல்களுக்கு பொது தேர்தல் பார்வையாளர்கள் (General observers ) & தேர்தல் செலவு பார்வையாளர்களை (Election Expenditure observers) தேர்தலின் போது நியமிக்கும்.
- ♦ தேர்தல் ஆணையத்திடம் இத்தேர்தல் பார்வையாளர்கள் இத்தேர்தல் முடிந்தபின் அத்தேர்தல் தொடர்பான அறிக்கை அளிப்பர்.

## தேர்தல் ஆணையத்தின் பதவி நிலை (அ) படிநிலை

தலைமை தேர்தல் ஆணையர் (Chief Election Commissioner)
தேர்தல் ஆணையர்கள் (Election Commissioners)
} இந்திய அளவில்

↓

தலைமை தேர்தல் அதிகாரி (Chief Electroral Officer) - மாநில அளவில்

↓

மாவட்ட தேர்தல் அதிகாரி (District Election Officer)

→ மாநகர ஆணையர் (Chennai), மாவட்ட ஆட்சித்தலைவர் (Without Chennai)

↓

வாக்குபதிவு அலுவலர் (Electroral Registration Officer)

↓

வாக்குச்சாவடி அலுவலர் (Booth Level Officer)

↓

வாக்கு அலுவலர் (Polling Officer)

## தேர்தல் ஆணையத்தின் பணிகள் & அதிகாரங்கள்

- ❖ தேர்தல் ஆணையம் 3 வகையான பணிகளை மேற்கொள்கிறது.

1) நிர்வாகப் பணிகள் (Administrative Functions)

2) பகுதி-நீதி பணிகள் (Quasi - Judicial Functions)

3) ஆலோசனை பணிகள் (Advisory Functions)

- ❖ வாக்காளர் பட்டியல் தயாரித்து தகுதியான வாக்காளர்கள் அடங்கிய பட்டியல்களை வெளியிடுகிறது.
- ❖ பாராளுமன்ற சட்டப்படி நாடு முழுவதும் தொகுதிகளை நிர்ணயம் செய்கிறது.
- ❖ தேர்தல் தொடர்பான தேதிகளை வெளியிடுகிறது.
- ❖ வேட்பாளர்களின் வேட்பு மனுக்களை பெற்று தகுதியான வேட்பாளர் பட்டியலை வெளியிடுகிறது.
- ❖ குடியரசு தலைவர் , துணை குடியர் தலைவர் , மாநிலங்களவை, மக்களவை, சட்டமேலவை, சட்டப்பேரவை ஆகிய 6 வகையான தேர்தல்களை நடத்துகிறது.
- ❖ கட்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கி சின்னம் ஒதுக்கீடு செய்கிறது . மேலும், இது தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குகிறது.
- ❖ தேர்தல் ஏற்பாடுகளுக்கு அரசு அலுவலர்களை நியமிக்கிறது . தேர்தல் சமயத்தில் தேர்தல் நடத்தை விதிகளை (Model Code of Conduct ) அறிவிக்கிறது. (1968 ல் அரசியல் கட்சிகளின் ஒப்புதலுடன் அறிமுகப்படுத்தியது).
- ❖ தேர்தல் பிரச்சாரம் & அறிவிப்புகளுக்கு கட்டுபாடுகளை விதிக்கிறது.
- ❖ நாடாளுமன்ற உறுப்பினர்கள் தகுதி இழப்பு தொடர்பாக குடியரசு தலைவர்க்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் , தகுதி இழப்பு தொடர்பாக ஆளுநருக்கும் ஆலோசனை வழங்கும்.
- ❖ குடியரசு தலைவர் ஆட்சி நடைபெறும் பகுதிகளில் தேர்தல் நடத்துவது தொடர்பாக குடியரசு தலைவருக்கு ஆலோசனை வழங்கும்.
- ❖ தேர்தலின் போது பிரச்சனைகள் (அ) வன்முறைகள் ஏற்பட்டால் தேர்தலை ரத்து செய்ய (அ) மறு தேர்தல் அறிவிக்கவோ அதிகாரம் பெற்றுள்ளது.
- ❖ தேர்தல் பணிகளை மேற்கொள்ள குடியரசு தலைவரிடமும் (மத்திய அரசிடம் ), ஆளுநரிடமும் (மாநில அரசிடம்) அலுவலர்களை கேட்டு பெறுகிறது.
- ❖ அரசியல் கட்சிகளுக்கு தேசிய கட்சி (ம) மாநில கட்சி அந்தஸ்துகளை வழங்குகிறது.

## தேர்தல் தொடர்பான சட்டங்கள் & விதிகள்

- ➢ தேர்தல் பதிவு விதிகள் (Registration of Electors Rule) (அ) வாக்காளர் பதிவு விதிகள் - 1960

- தேர்தல் விதிகள் (Conduct of Election Rules ) - 1961. குடியரசு தலைவர் & துணை குடியரசு தலைவர் தேர்தல் சட்டம் (President & Vice President Election Act ) - 1952. இது 1997-ல் திருத்தப்பட்டது. தேர்தல் விதிகளை (Conduct of Election Rules) (1961), 2011ல் திருத்தம்.
- யூனியன் பிரதேச அரசாங்க சட்டம் (Government of Union Territorie Act ) 1963 தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீ டுகள்) சட்டம் (Election Symbols Reservation and Allotment Act) 1968.
- டெல்லி தேசிய தலைநகர் பகுதி அரசாங்க சட்டம் (Government of the National Capital Territory, Delhi Act) 1991.
- தலைமை தேர்தல் ஆணையர் & மற்ற தேர்தல் ஆணையர்களின் பணி கட்டுப்பாடுகள் சட்டம் 1991. இது 1993-ல் திருத்தப்பட்டது. (Chief Election Commissioner and Election Commissioners conditions of Service Act)
- தேர்தல் சின்ன ங்கள் அவமதிப்பு தடுப்புச்சட்டம் (Prevention of Insults of National Honour Act ) - 1971. இச்சட்டம் தேசிய கீதம் , அரசியலமைப்பு சட்டம் , தேசியக்கொடி, தேசிய சின்னங்களை அவமதிப்பதை தடை செய்கிறது.

## தேர்தல் சீர்திருத்தங்கள் (Electroral Reforms)

- தேர்தல் தொடர்பாக ஆராய பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன.
  - தர்குண்டே கமிட்டி (Tarkunde Committee) - 1974
  - தினேஷ் கோசுவாமி கமிட்டி (Dinesh Goswami) - 1990
  - N.N.வோரா கமிட்டி (N.N.Vohra) - 1993, அரசியல்வாதிகளுக்கும் - குற்றவாளிகளுக்கும் இடையேயான தொடர்பை வெளிப்படுத்திய கமிட்டி)
  - இந்திரஜித் குப்தா கமிட்டி (Indhirajith Gupta ) - 1998 , (தேர்தலுக்கு அரசு நிதி வழங்குவதை ஆராய 1998-ல் இந்திரஜித் குப்தா தலைமையில் 8 நபர் குழு அமைக்கப்பட்டது. இக்குழு 1999-ல் அறிக்கை அளித்தது)
  - டங்கா (Tankha) கமிட்டி - 2010
- 1994 ல் தேர்தல் ஆணையம் அரசியல் கட்சிகள் தங்களது பதவியாளர்களை காலிப்பணியிடம் ஏற்பட்ட நான்கு மாதத்திற்குள் தேர்வு செய்ய வேண்டும் என அறிவித்தது.
- 1993-ல் தலைமை தேர்தல் ஆணை யர் T.N.சேஷன் காலத்தில் வாக்காளர் அடையாள அட்டை (Election Photo Identity Card - EPIC) அறிமுகம்.
- 1989-ல் மின்ன ணு வாக்குப்பதிவு இயந்திரம் (Electronic Voting Machine-EVM) பயன்படுத்துவது பற்றி தீர்மானிக்கப்பட்டது.

- 1998-ல் ராஜஸ்தான் , டெல்லி, மத்தியபிரதேசம் ஆகி ய மாநிலங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் முதன்முதலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.
- 1999-ல் கோவா சட்டமன்ற தேர்தலில் முதன் முதலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.
- 2003 முதல் நடைபெறும் அனைத்து மாநில சட்டமன்ற தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 2004 ல் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் முதன்முதலில் நாடு முழுவதும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.
- 1990-ல், V.P.சிங் அரசாங்கம் அமைத்த , தினேஷ் கோசுவாமி . கமிட்டி அளித்த அறிக்கையின் பரிந்துரைகள் 1996-ல் நடைமுறைக்கு வந்தது.

## தினேஷ் கோசுவாமி கமிட்டியின் பரிந்துரைகள்

- ✓ நாடாளுமன்ற பொது வேட்பாளர் வைப்புத்தொகை ரூ .500 லிருந்து ரூ . 10000மாக உயர்த்தப்பட்டது, (2010- டங்கா கமிட்டி பரிந்துரைப்படி ரூ .10,000 லிருந்து ரூ .25,000 ஆக உயர்த்தப்பட்டது)
- ✓ நாடாளுமன்ற SC, ST வைப்புத்தொகை ரூ .250 லிருந்து ரூ .5000 ஆக உயர்வு . ( 2010 - டங்கா கமிட்டி பரிந்துரைப்படி ரூ.5000 லிருந்து ரூ.12,500 ஆக உயர்வு)
- ✓ சட்டமன்ற பொது வேட்பாளர் வைப்புத் தொகை ரூ .250 லிருந்து ரூ .5000 ஆக உயர்வு . (2010 - டங்கா கமிட்டி பரிந்துரைப்படி ரூ.5000 லிருந்து ரூ.10,000 ஆக உயர்வு).
- ✓ சட்டமன்ற SC, ST வேட்பாளர் வைப்புத்தொகை ரூ .125 லிருந்து ரூ .2,500 ஆக உயர்வு . (2010 - டங்கா கமிட்டி பரிந்துரைப்படி ரூ.2,500 லிருந்து ரூ.5,000 ஆக உயர்வு)
- ✓ குடியரசு தலைவர் வேட்பாளர் வைப்புத்தொகை ரூ . 2,500 லிருந்து ரூ .15,000 ஆக உயர்த்தப்பட்டது.
- ✓ துணை குடியரசுத்தலைவர் வேட்பாளர் வைப்புத்தொகை ரூ .2,500 லிருந்து ரூ.15,000 ஆக உயர்த்தப்பட்டது.
- ✓ குடியரசு தலைவர் வேட்பாளரை முன்மொழியும் வாக்காளர் எண்ணிக்கை 10 லிருந்து 50 ஆகவும், வழிமொழியும் வாக்காளர் எண்ணிக்கை 10 லிருந்து 50 ஆகவும் உயர்த்தப்பட்டது.
- ✓ துணை குடியரசு தலைவர் வேட்பாளரை முன்மொழியும் வாக்காளர் எண்ணிக்கை 5 லிருந்து 20 ஆகவும், - வழிமொழியும் வாக்காளர் எண்ணிக்கை 5 லிருந்து 20 ஆகவும் உயர்த்தப்பட்டது.

- ✓ நாடாளுமன்ற உறுப்பினர் வேட்பாளர் செலவுத் தொகை 25 லட்சமாக உயர்த்தப்பட்டது. தற்போது ரூ.70 லட்சம்.
- ✓ சட்டமன்ற உறுப்பினர் வேட்பாளர் தேர்தல் செலவுத் தொகை 10 லட்சமாக உயர்த்தப்பட்டது. தற்போது 40 - லட்சம்.
- ✓ குடியரசு தலைவர் & துணை குடியரசு தலைவர் தொடர்பான பரிந்துரைகள் மட்டும் 1997-ல் நடைமுறைக்கு வந்தது, மற்ற பரிந்துரைகள் 1996-ல் நடைமுறைக்கு வந்தது.
- ✓ 2010-ல் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் திருத்தப்பட்டு வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. இது 10.02.2011-ல் நடைமுறைக்கு வந்தது.
- ✓ 2010-ல் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் திருத்தப்பட்டு வேட்பாளர்கள் (அ) மக்கள் பிரதிநிதிகள் குற்ற வழக் கில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றால் தண்டனை காலம் & 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட இயலாது.
- ✓ உச்சநீதிமன்றம் 27.09.2013-ல் வெளியிட்ட தீர்ப்பில் EVM-ல் NOTA (Non of the Above ) பட்டணை வைக்க ஆணையிட்டது . , * 2015 பீகார் சட்டமன்ற தேர்தலில் NOTA விற்கு தனி சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**Art-326**

- ♦ வயது வந்தோர் வாக்குரிமை (Universeal Adult Franchise (அ) Adult Suffrage ) பற்றி குறிப்பிடுகிறது.
- ♦ 1988 - 61வது சட்டத்திருத்தப்படி வயது வந்தோர் வாக்குரிமை வயது 21 to 18 ஆக குறைக்கப்பட்டது.
- ♦ இது மார்ச் 28, 1989-ல் நடைமுறைக்கு வந்தது . ( 1985 - கட்சித்தாவல் சட்டம் - அரசாங்கம் - ராஜிவ்காந்தி)

**Art-329**

- ❖ தேர்தல் நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிட இயலாது. (Bar to Interference by Courts in Electroral Matters)

## அரசியல் கட்சிகள் (Political Parties)

- ❖ கட்சிமுறை தோன்றிய நாடு - இங்கிலாந்து.
- ❖ அரசியல் கட்சிகள் மக்களாட்சியின் உயிரும், இரத்தமுமாக விளங்குகிறது. மக்களிற்கும் அரசாங்கத்திற்கும் இடையே இணைப்பாக செயல்படுகிறது . மக்களின் கருத்துகளை ஒருங்கிணைக்கிறது.

- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951-ன்படி அரசியல் க ட்சிகள் தேர்தல் ஆணையத்தில் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்.
  - "அரசியல் கட்சி என்பது குறிப்பிட்ட மக்கள் கூட்டம் அரசியலமைப்பு தேர்தல் மூலம் அரசாங்கத்தை கைப்பற்றி தங்கள் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதாகும்" - ஜெண்டல்
  - "அரசியல் எண்ணங்களை பகிர்ந்து அரசாங்கத்தை அரசிய ல் அலகாக செயல்படுத்தும் மக்கள் குழுவே அரசியல் கட்சி" - கில்கிரைஸ்ட்.
  - "தமது லட்சியங்கள் & அமைப்பு மூலம் செயல்படுவதே அரசியல் கட்சி " - ரௌசக்.
  - "அரசியல் கட்சி இல்லாத மக்களாட்சி , மாலுமி. இல்லாத கப்பலை போன்றதும் , துடுப்பு இல்லாத பட்கைப் போன்றதுமாகும்" - ஜவஹர்லால் நேரு.
- கட்சி முறை 3 வகைப்படும்,
  1. ஒரு கட்சி ஆட்சி முறை (One Party :System)
  2. இரு கட்சி ஆட்சிமுறை (Two Party System)
  3. பல கட்சி ஆட்சிமுறை (Multi Party System).

### 1. ஒரு கட்சி ஆட்சி முறை:

→ ஒரே ஒரு கட்சி மட்டும் இருக்கும், எதிர்க்கட்சி இருக்காது.

(eg) ரஷ்யா, சீனா, கியூபா & கிழக்கு ஐரோப்பிய நாடுகள்.

### 2. இரு கட்சி ஆட்சி முறை :

→ இரண்டு கட்சிகள் மட்டும் இருக்கும். ஆளும்கட்சி & எதிர்க்கட்சி.

(eg) USA - Republican Party (குடியரசு கட்சி)

Democratic Party (ஜனநாயக கட்சி)

இங்கிலாந்து - Conservative Party (பழமைவாத (அ) கன்சர்வேட்டீவ் கட்சி) Labour Party (தொழிலாளர் கட்சி).

### 3. பல கட்சி ஆட்சி முறை :

→ நிறைய கட்சிகள் இருக்கும்." * உலகிலேயே கட்சிகள் அதிகமுள்ள நாடு - இந்தியா." (eg) இந்தியா, சுவிட்சர்லாந்து, பிரான்சு, இத்தாலி

## இந்திய கட்சி முறை (Party System of India)

- இந்தியாவில் பல் கட்சி ஆட்சி முறையில் 2 வகையான கட்சிகள் உள்ளன.

1) தேசிய கட்சி (National Party)

2) மாநில (அ) பிராந்திய கட்சி (Regional (or) State Party) வாசி

## 1. தேசிய கட்சிகள் :

- இந்திய தேர்தல் ஆணையம் பின்வரும் தகுதிகளை பெற்றுள்ள கட்சிகளை தேசிய கட்சியாக அறிவிக்கும்.
  - நாடாளுமன்ற (அ) சட்டமன்ற பொதுத்தேர்தலில் குறைந்தபட்சம் 4 (அ) அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6% செல்லுப்படியான வாக்குகளையும் , 4 மக்களவை உறுப்பினர்களையும் (MP) பெற்றிருக்க வேண்டும்.

(அல்லது)

- லோக்சபா பொது தேர்தலில் குறைந்தபட்சம் 3 மாநிலங்களில் 2% உறுப்பினர்களை (M.P) பெற்றிருக்க வேண்டும். -

(அல்லது)

- 4 மாநிலங்களில் மாநில கட்சியாக இருக்க வேண்டும். (eg.) BJP, INC

| தேசிய கட்சியின் பெயர் | சின்ன சின்னம் |
|---|---|
| 1) பகுஜன் சமாஜ் கட்சி (BSP) - | யானை (Elephant) |
| 2) பாரதிய ஜனதா கட்சி (BJP) - | தாமரை (Lotus) |
| 3) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) - | கதிர் அரிவாள், சுத்தியல் (Ears of Corn and Sickle) |
| 4) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி - (CPM (or) PI(M), | கதிர் அரிவாள், சுத்தியல், நட்சத்திரம்(Hammer, Sickle and Star) |
| 5) இந்திய தேசிய காங்கிரஸ் (INC) - | கை (Hand) |
| 6) தேசிய வாத காங்கிரஸ் (NCP) - | கடிகாரம் (Clock). |
| 7) ராஷ்டிரிய ஜனதா கட்சி (RJD) - | அரிக்கேன் விளக்கு (Hurricane Lame) |

(2013-ல் ராஷ்டிரிய ஜனதா கட்சி தேசிய கட்சி அந்தஸ்தை இழந்தது).

**2. மாநில கட்சிகள்:**

- ஒரு குறிப்பிட்ட மாநிலம் (அ) ஒரு பகுதியின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் கட்சி மாநில கட்சி.

தேர்தல் ஆணையம் பின்வரும் தகுதிகளை பெற்றுள்ள கட்சியை மாநில கட்சியாக அங்கீகரிக்கும்.

- அம்மாநிலத்தில் நடைபெற்ற சட்டமன்ற பொது தேர்தலில் 6% செல்லுபடியான வாக்குகளையும் & 2 சட்டப்பேரவை உறுப்பினர்களை (MLA) பெற்றிருக்க வேண்டும் , (அல்லது)
- அம்மாநிலத்தில் நடைபெற்ற மக்களவை பொது தேர்தலில் 6% செல்லுபடியான வாக்குகள் &1 மக்களவை - உறுப்பினரை (MP) பெற்றிருக்க வேண்டும்; (அல்ல து)
- அம்மாநிலத்தில் நடைபெற்ற சட்டமன்ற பொதுத்தேர்தலில் 8% வாக்குகளை பெற்றிருக்க வேண்டும் (இத்தகுதி, 2011-ல் சேர்க்கப்பட்டது) மாநில கட்சிகள்: (eg) திமுக, அஇஅதிமுக, தே.மு.தி.க., தெலுங்கு தேசம், தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி, அகாலிதளம்.
- 1952-ல் நடைபெற்ற இந்தியாவின் முதல் பொதுத்தேர்தலின் போது இந்தியாவில் 14 தேசிய கட்சிகள் & 39 மாநில கட்சிகள் இருந்தது.
- 2009-ல் நடைபெற்ற மக்களவை பொதுத்தேர்தலின் போது இந்தியாவில் 7 தேசிய கட்சிகள், 40 மாநில கட்சிகள் & 980 அங்கீகரிக்கப்படாத கட்சிகள் (Unrecognised Parties ) இருந்தது.
- 2013-ல் இந்திய தே ர்தல் ஆணையம் அளித்த அறிக்கையின்படி இந்தியாவில் 6 தேசிய கட்சிகள், 51 மாநில கட்சிகள் & 1415 அங்கீகரிக்கப்படாத கட்சிகள் இருந்தது.